**முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | **L.A.O.P** | **5** | **of** | **2025** |

**2026–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 09 –ம் நாளான இன்று**

கோருரிமைதாரர் தரப்பில் சாட்சியின் வாக்குமூலமானது 1873–ம் ஆண்டின் 10வது வட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திருமதி.Logeshwari, Translator, என்பவரால் சட்டத்தின் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | கோபாலகிருஷ்ணன் |
| தந்தை பெயர் | மணி |
| கிராமம் | |
| தொழில் | |
| வயது | 55 |

நாள் 09.01.2026 – கோ.ம.சா.1 (CW1)

**முதல் விசாரணை**

நான் எனது தரப்பில் முதல் விசாரணக்கான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. **கோ.ம.சா.ஆ.1 முதல் கோ.ம.சா.ஆ.** 3 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**1வது எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். மனு சொத்தை விவசாய நிலமாக கிரையம் வாங்கவில்லை. நான் நிலத்தை மனையாக வாங்கினேன். நான் மனையாக கிரையம் வாங்கினேன் என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் தாக்கல் செய்த ஆவணங்களில் மனையாக தான் உள்ளது. மனைப்பிரிவின் பெயர் எனக்கு ஞாபகமில்லை. நான் கிரையம் பெறும் போது வைப்பூர் கிராமம் பின் தங்கிய கிராமமாக இருந்ததா அல்லது வளர்ந்த கிராமமாக இருந்ததா என்றால் வளர்ந்த கிராமமாக தான் இருந்தது. வளர்ந்த கிராமத்தில் மினரல் வாட்டர் போடுவதற்கு அனுமதி வழங்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. மினரல் வாட்டர் போடுவதற்கு நிலத்தை வாங்கினேன் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் நான் வாங்கிய சில நாட்களிலேயே அரசாங்கம் நிலத்தைஆர்ஜிதம் செய்தது. வைப்பூர் கிராமத்தில் இருந்து திரும்பெரும்புதூர் 7 கிமீ துாரத்தில் உள்ளது. மனு சொத்தை கிரையம் பெறும் காலத்தில் கிராமத்தில் அனைத்து வசதிகளும் இருந்ததா என்றால் இருந்தது. மனு சொத்தை எடுத்தற்கு பின்பு முழுமையாக ஆவணங்களை பரிசீலனை செய்து அப்போதிருந்த மதிப்பை சரியாக நிர்ணயம் செய்து தான் இழப்பீடு தொகை நிர்ணயிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த கோ.மா.சா 1 ல் கிரைய தொகை ரூபாய் 2,22,000/- 1,200 சதுரடிக்கு குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அதன படி சதுரடி ஒன்றிக்கு ரூபாய் 200க்குள் தொகை உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த கோ மா சா ஆ 2 ல் 1,200 சதுரடிக்கு ரூபாய் 1,50,000/- என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். கோ மா சா ஆ 1 2009 ஆம் ஆண்டில் ஏற்பட்டது மற்றும் கோ மா சா ஆ 2 2010 ஆண்டில் ஏற்பட்டது என்றால் சரிதான். 2010 ல் நான் தாக்கல் செய்த ஆவணத்திலேயே சதுரடிக்கு ரூபாய் 140 தொகை

நிர்ணயிக்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய பிராமண வாக்குமூலத்தில் நான் கோரியுள்ள சதுரடிக்கு ரூபாய் 3,000 கொடுக்க வேண்டும் கூறியுள்ளேன் ஆனால் நான் தாக்கல் செய்த ஆவணங்களில் 1 சதுரடிக்கு ரூபாய் 200 அல்லது ரூபாய் 140 என்று தான் கணக்கிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணங்களில் உள்ள தொகைகளை விட மிகையான தொகையை நான் கோருவதால் அது எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய பிராமண வாக்குமூலத்தில் கூறிய கல்லுரிகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் ஆகியவை சாலை அமைப்பிற்கு பின்பு தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய பிராமண வாக்குமூலத்தில் கூறியப்படி மனு சொத்தின் அருகில் பெரிய ஊர்கள் உள்ளது என்பதை நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனு சொத்திற்கான இழப்பீடு தொகையை உரிய நடைமுறைகளை பின்பற்றி தான் வழங்கியிருப்பதால் நான் கூறும் கோரிக்கையின் படி இழப்பீடு வழங்க வேண்டிய அவசியமில்லை என்றால் தவறு.

**மறு விசாரணை இல்லை.**

(Sd/- Deepthi Arivunithi, M.L.,)
Principal District Court,
Kancheepuram.